## தி.மு.க. தொண்டர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் பெ.சேகர் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொண்டர் அணியின் விழுப்புரம் தெற்கு, திருப்பூர் கிழக்கு ஆகிய மாவட்ட மற்றும் கும்பகோணம் மாநகரஅமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

தலைவர் — கே.எஸ். ஆசைத்தம்பி, 24, பிள்ளையார் கோவில் தெரு, அடூர்கொளப்பாக்கம், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் — அ. பார்த்தசாரதி, 1/117, தொட்டி குடிசை மெயின் ரோடு, தி.எடையார் மற்றும் அஞ்சல், திருவெண்ணெய் நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் — ஜெ. அருள்மொழி, 1/3, திரௌபதி அம்மன் கோவில் தெரு, கொட்டியாம்பூண்டி, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் 1) பா. கர்ணா, பிள்ளையார் கோவில் தெரு, குடமுருட்டி, தபவனம் அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) மு. வெங்கட் 162, நேதாஜி தெரு, என்.ஜி.ஜி.ஓ. நகர், திருக்கோவிலூர், விழுப்புரம் மாவட்டம். 3) சு. ராமகிருஷ்ணன் மாரியம்மன் கோவில் தெரு, வாக்கூர் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) தி. முருகன் மாரியம்மன் கோவில் தெரு, அடங்குணம், அன்னியூர் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) ந. யோகேஷ் கங்கை அம்மன் கோவில் தெரு, வசுமதி நகர், அயினம்பாளையம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**திருப்பூர் கிழக்கு மாவட்டம்**

தலைவர் — எஸ்.வி.எஸ். சாகுல் அமீது, 81, அனுமந்தாபுரம் அஞ்சல், தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் — எஸ். வெங்கடேஷ்வரன், 42, ஒ.எச். டேங் வீதி, மூலனூர் - 638106, தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் — தென்றல் ரமேஷ் (எ) எஸ். தியாகராஜன், 178, பாவடி வீதி, மேலப்பாளையம் அஞ்சல், சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் 1) எம். குணசேகரன் 134/2, மேலப்பாளையம் அஞ்சல், சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம். 2) எம். மதிவாணன். 4/116, வண்ணாபட்டி, கெத்தல்ரேவ் அஞ்சல், தாராபுரம் - 638657, திருப்பூர் மாவட்டம். 3)மு. சேமலையப்பன். 101, கென்னடி வீதி. சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம். 4) எம். தெண்டபாணி. 46டி, தமிழ் குடியிருப்பு, அம்மன் கோவில் வீதி, வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம். 5) த. பிரதாப் நியூ ஸ்ரீ சக்தி காளியம்மன் நகர், தளவாய்பட்டினம் அஞ்சல், தாராபுரம் தாலுக்கா - 638656, திருப்பூர் மாவட்டம். 6) எஸ். குமார். சாணார்பாளையம் ரோடு, ஜெ.ஜெ. நகர், மூலனூர் அஞ்சல், தாராபுரம் - 638106, திருப்பூர் மாவட்டம். 7) எம். சுஜீத். 1/25, சாவடிபாளையம், சிவன் மலை, காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம்.

**தஞ்சை வடக்கு மாவட்டம்**
**கும்பகோணம் மாநகரம்**

தலைவர் — டி. மணிமாறன், 23, பெருமாண்டி தெற்கு தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் — எஸ். விஜயேந்திரன், 26, எ.ஆர்.ஆர். நகர், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் — இரா. செந்தில், 6பி/11ஏ, மேலக் காவேரி கீழத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் 1)கே. ஆனந்தபிரபு 60, ஜெ.பி. கீழ வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) கே. பாபு (எ) துரைராஜன் 70டி, அழகப்பன் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) ஆர். ராஜேஷ்கண்ணன் 28பி, பாணாதுறை புதுத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) க. பாண்டியராஜன். 10/30, சக்கரபாணி வடக்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) அ. மணிகண்டன் 27, பெரும்பாண்டி தெற்கு தெரு, மேலக் காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.


**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் :20,12.2025.

**மாஸ்டர் பெ. சேகர்**
செயலாளர்
தி.மு.க. தொண்டர் அணி

## 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டுவந்த

# ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதுரை வடக்கு மாவட்டத்தில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!



100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து வரும் 24ம் தேதி காலை 10.00 மணியளவில் மதுரை வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” கீழ்கானும் அட்டவனைப்படி ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு :-

| வ.எண் | ஊராட்சி ஒன்றியம் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1. | மதுரை கிழக்கு, மதுரை கிழக்கு வடக்கு, மதுரை கிழக்கு தெற்கு | ஊராட்சி மன்றத் தலைவர், அலுவலகம், அருகில், ஒத்தக்கடை. |
| 2. | மேலூர் கிழக்கு,மேலூர் மேற்கு, மேலூர் வடக்கு, மேலூர் தெற்கு, மேலூர் நகர், அ.வல்லாளபட்டி | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், மேலூர். |
| 3. | கொட்டாம்பட்டி கிழக்கு, கொட்டாம்பட்டி மேற்கு, கொட்டாம்பட்டி வடக்கு, கொட்டாம்பட்டி தெற்கு, | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், கொட்டாம்பட்டி. |
| 4. | அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் மேற்கு, அலங்காநல்லூர் வடக்கு, அலங்காநல்லூர் தெற்கு, | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில், அலங்காநல்லூர். |
| 5. | வாடிப்பட்டி வடக்கு, வாடிப்பட்டி தெற்கு, | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில்,(திருவேடகம்) வாடிப்பட்டி. |
| 6. | மதுரை மேற்கு, மதுரை மேற்கு (வடமேற்கு – கோவில்பாப்பாகுடி), திருப்பரங்குன்றம் வடக்கு | சிக்கந்தர் சாவடி |

இந்த மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தில் அந்த அந்த பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட,ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் வெற்றியடைச் செய்திட வேண்டுகிறோம்.

**அமைச்சர் பி.மூர்த்தி,**
செயலாளர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.




விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், வல்லம் அமுதா ரவிக்குமார்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை ,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகர செயலாளர் கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.

# அவலூர்பேட்டையில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, டிச. 22 - விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு அரசின் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். வளத்தி வட்டாரஆரம்ப சுகாதார மருத்துவமனை அலுவலர் டாக்டர் வெங்கடேசன் அனை வரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ . முகாமினை தொடங்கி வைத்து மகப்பேறு பெண்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய பெட்டகத்தினைவழங்கி சிறப்புரையாற்றினார்.

முகாமில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெய்சங்கர்,

ஏகாம்பரம், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், ஒன்றிய கவுன்சிலர்கள் ஷாகின் அர்ஷர், ரவிச்சந்திரன், ராஜா, ஊராட்சி மன்ற தலைவர் செல்வம், துணை தலைவர் சரோஜா அய்யப்பன், உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முகாமில் பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல் ,மகப்பேறு, குழந்தைகள் நலன், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு தொண்டை, மனநலம் ,பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை, மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரத்தப் பரிசோதனை இசிஜி உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது.

மேலும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எக்கோ, கார்டியா கிராம், எக்ஸ்ரே அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டது.

மேலும் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்கள்கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு முகாமில்மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்களை வழங்கினர்


இந்த முகாமில் 1300க்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

மருத்துவ முகாமில் பயனடைந்தவர்கள் அனைத்து நோய்களுக்கும் ஒரே இடத்தில் தீர்வு காணப்படுவதால் வயதானவர்கள் எந்த ஒரு சிரமமும் இன்றி தங்களது உடல்நிலை ஒரே இடத்தில் பரிசோதனை செய்து அந்தந்த சிகிச்சைக்கு தேவையான மருந்து மாத்திரைகள் மருத்துவர்கள் கொடுத்து அனுப்புகின்றனர்.

இது போன்ற ஒரு உன்னதமான திட்டத்தை அறிவித்து செயல்படுத்துகின்ற தமிழ்நாடு முதல மைச்சருக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கரூர் வை. இரத்தினவேலு
### டிசம்பர் 22 (2011)



**அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.**

**கல்லூரிப் படிப்பு முடித்து வெளியே வந்தவுடன் புகளூர் கிளைக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றவர். பின்னர் கரூர் ஒன்றியப் பொறுப்பாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.**

**மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், இரயில் மறியல் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பெருந்தலைவராகப் பொறுப்பு வகித்தவர்.**


**2002ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் “பெரியார் விருது” வழங்கிச் சிறப்பித்தார்.**

**இவரது இறுதிக்காலம் வரை டி.என்.பி.எல். காகிதஆலை ஒப்பந்த தொ.மு.ச.வின் தலைவராக இருந்து தொழிலாளர் நலனுக்காகவும் போராடியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.டி. தணிகாசலம்
### டிசம்பர் 22 (2009)



**குன்றத்தூரில் கழகம் வளரப் பாடுபட்ட செயல்வீரர்களில் இவரும் ஒருவர்.**

**1950ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசு விதித்த 144 தடை உத்திரவை மீறி பேச்சுரிமை, எழுத்துரிமை காக்க கூட்டம் நடத்தியதையொட்டி காவல்துறை இவரைக் கைது செய்தது.**

**கழகம் அறிவித்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்த்து போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவர்**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**